அசில் இனக் கோழிகள் - இந்தியாவின் பெருமை

மு. முருகன், து. காந்திமதி மற்றும் சூ.கி. எட்வின்
கால்நடைப் பண்ணை வளாகம்,
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி - 627 358.
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை - 600 007.

கோழி இனங்களில் தனித்துவமான பெருமையும், உலகப் புகழும் பெற்றது. நம் நாட்டைச் சோந்த அசீல் இனக் கோழிகள் என்றால் அது மிகையல்ல. அசீல் என்ற சொல் அடிப்படையில் அரபுச் சொல்லாகும். அசீல் என்ற அரபுச் சொல்லுக்கு தூய, தனித்துவமான, உன்னத என்று பொருள்படும். அதனைப் போலவே, இக்கோழிகள் உடல் மற்றும் உருவ அமைப்பிலும், நடத்தையிலும் தனித்தன்மை கொண்டவையாகும்.

பண்டைக் காலம் முதல் நம் முன்னோர்கள் அசீல் இனச் சேவல்களை வளர்த்து கோழிச் சண்டைக்குப் பயன்படுத்தியதால் இதனை நம் நாட்டில் ''சண்டைக் கோழிகள்'' அல்லது ''போர்க் கோழிகள்'' என்றும் அழைப்பர்.

பெரும்பாலான பிரிட்டானிய கால னித்துவ நாடுகளில் இதனை இந்தியன் கேம் (Indinan Game) என்பர். அதாவது இந்தியாவில் கோழிச்சண்டை விளையாட்டிற்காக பயன்படுத்திய கோழி இனம் என்று பொருள்படும்.

அசீல் இனக் கோழிகள் உலகம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. எனினும் அதன் தாயகமாக கருதப்படுவது ஆசிய கண்டத்தின் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளாகும். தூய அசீல் இனக் கோழிகள், இந்தியா முழுமைக்கும் காணப்பட்டாலும் அதன் அடர்த்தியான வளர்ப்பு இடங்களாக ஆந்திரா, தெலுங்கானா தமிழ்நாடு, கர்நாடகா, சத்தீஸ்கர், ஒடிசா, மத்திய பிரதேசம் மற்றும் மகாரஷ்டிரா மாநிலங்களைக் குறிப்பிடலாம். ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டம் தரமான அசீல் இனக் கோழிகளுக்குப் புகழ் பெற்ற இடமாகும்.

தென் இந்திய மாநிலங்களில் காணப்படும் அசீல் ரகங்களை மெட்ராஸ் அசீல் என்றும் அழைப்பார்கள். வட இந்தியாவில் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களிலும் இக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

அசீல் இனம் பெருவிடைக் கோழியினமாகும். அசீல் இனத்தின் சேவல்கள் நல்ல உடல் எடையுடன் பெரிதாகவும், மார்பு அகன்றும், கழுத்து நீண்டும், தலை சிறிதாகவும், கண்கள் கருப்பு நிறத்துடன், கூராகவும், கோபப் பார்வையுடனும் இருக்கும். கால்கள் நீண்டும், உறுதியாகவும், தரையில் அழுந்த படிந்தும் காணப்படும். தலையில் கொண்டை சிறிதாகவும், கொத்து கொண்டையாகவும் (Pea comb) தலையை ஒட்டினாற்போல் இருக்கும்.

இதன் அலகுகள் குட்டையாக மற்றும் உறுதியாக மஞ்சள் நிறத்திலும், காது மடல்கள் சிகப்பு வண்ணத்திலும் கால்கள் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். ஆதி காலம் தொட்டு இவை கோழிச் சண்டைகளுக்கு தேர்ந்தெடுத்து வளர்க்கப்பட்டதால், இவை சற்றே கோபக்கார கோழிகள் என்பதும் உண்மைதான். எனினும் வளர்ப்பவர்கள் இடத்தில் நல்ல விதமாக பழகும் பண்பு கொண்டது தான். இவ்வினத்தின் பெட்டைக் கோழிகள், அளவில் சிறிதாகவும், புறக்கடை வளர்ப்பில், சிறிய குறைந்த

எண்ணிக்கையில் வருடத்திற்கு 40 முட்டைகள் இடும் தன்மையும் கொண்டவையாகும். நல்ல அடை காக்கும் திறனும், குஞ்சுகளை பேணி வளர்க்கும் திறனும் கொண்டவை.

அசீல் இனக் கோழிகள் பல வண்ணங்களில் காணப்படும். அடர் சிவப்பு, கருப்பு, அடர் பழுப்பு போன்றவை அடிப்படை இக் கோழிகளின் அடிப்படை நிறமாகும். வெள்ளை நிறக் கோழிகளும் உண்டு. அசீல் கோழிகளில் பல ரகங்கள் உண்டு. அதன் உடல் அமைப்பு மற்றும் இறக்கைகளின் வண்ணங்களைக் கொண்டு பல ரகங்களாக பிரிக்கலாம்.

தமிழ்நாட்டில் கிளி மூக்கு - விசிறி வால் அசீல் கோழி ரகம் மிகவும் பிரபலம். இக்கோழிகளின் அலகு கிளியைப் போன்றும் வால் விசிறி போன்று நீண்டும் இருப்பதால் இப்பெயர்க்காரணம். இதற்கான வளர்ப்புக் குழுக்கள் மற்றும் அமைப்புகள், திண்டுக்கல், மதுரை, கோயமுத்துர், சேலம், திருப்பூர் மாவட்டங்களில் சிறப்பாக செயல் பட்டு வருகின்றது. நிறங்களின் வரிசையில் மயில் கருப்பு, செங்கருப்பு, செவலை, சாம்பல், கருங்கீரி, செங்கீரி, வெள்ளை, பொன்னிறம் போன்றவை பிரபலமானவை.

நவீன வீரிய ரக இறைச்சிக் கோழிகளின் மரபு வழி உருவாக்கலில் அசீல் இனக் கோழிகள்தான் பயன்பட்டன என்பது பலரும் அறியாத ஆச்சரியமான உண்மையாகும். இங்கிலாந்து நாட்டை பூர்வீகமாக கொண்ட உலகப் புகழ் பெற்ற இறைச்சி இனக் கோழிகளான கார்னிஷ் கோழிகள் தான் வீரிய ரக இறைச்சிக் கோழிகளின் உருவாக்கத்துக்கு தந்தை வழி மரபாகப் பயன்பட்டன.

அத்தகைய பெருமை வாய்ந்த இறைச்சி இனக் கோழியான கார்னிஷ் கோழிகளின் மரபு வழி உருவாக்கத்துக்கு தந்தை வழியாக அசீல் இனச் சேவல்கள் தான் பயன்படுத்தப்பட்டன என்பது அறிவியல் வரலாற்று பதிவாகும்.

அசீல் கோழிகளின் உறுதியான பெரிய உடற் கட்டு, தரமான இறைச்சி இனக் கோழிகளை உருவாக்குவதற்கு பயன்பட்டன.

அசீல் மற்றும் கார்னிஷ் இனக் கோழிகள் இரண்டிற்கும் கொண்டைக் கொத்தாக தலையை ஒட்டி அமைந்திருக்கும். நம் முன்னோர்கள் உருவாக்கிய தரமான கோழி இனங்கள் தான் நாம் இப்போது உருவாக்கியிருக்கும் வணிக ரீதியான கோழி ரகங்களுக்கு அடிப்படை என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கோழிச்சண்டைகள் தடை செய்யப்பட்ட விடியாட்டு என்ற போதும் இக்கோழிகளின் மேல் கொண்ட பற்று காரணமாக இன்றளவும் இக்கோழிகள் கோழி வளர்ப்பு ஆர்வலர்களால் தேர்ந்தெடுத்து இனப் பெருக்கம் செய்யப்படுகிறது.

மேலும் தற்போது வேகமாக வளர்ந்து வரும் பண்ணை முறை நாட்டுக் கோழி வளர்ப்பிலும் அசீல் இனக் கோழிகளின் பங்கு முக்கியமானதாகும். பண்ணை முறை நாட்டுக் கோழி வளர்ப்பில், பெரும்பாலான பண்ணடியாளர்களின் விருப்பம் அசீல் மற்றும் அசீல் கலப்பினக் கோழிகளேயாகும். இதன் முட்டை மற்றும் இறைச்சி மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது.

இதனால் பெரும்பாலான தாய்க் கோழிப் பண்ணைகளில் இனப்பெருக்க சேவல்களாக அசீல் இனத்தையே பயன் படுத்துகின்றனர். அசீல் இனக் கோழிகளின் வரலாற்று முக்கியத்துவம், தனித்துவம், பாரம்பரியம் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளும் போது அசீல் கோழி இனத்தை, கோழிகளில் இந்தியாவின் பெருமை என்றே கூறலாம்.

தமிழ்நாட்டின் காங்கேயம் மாடுகளைப் போல் இக்கோழிகளும் போற்றி பாதுகாத்து பயன்படுத்த வேண்டிய இனம் என்றால் அது உண்மைதான்.